[1st April 1963

கனம் திரு. வெ. ராமைய்யா : முக்கிய கேள்வியில் 'இருக்கக் கூடிய நீர்ப் பிடிப்பைக் குறைப்பது' பற்றி இருக்கிறது. இப்பொழுது, நீர்ப்பிடிப்பை அதிகப்படுத்தவேண்டும் என்று கேட்கிறார். இருக்கும் நீர்ப்பிடிப்பை ஒழுங்காக வைக்கவே சங்கடங்கள் அதிகமாக இருக்கின்றன. கனம் அங்கத்தினருடைய ஆலோசனையைக் கேட்டால் தீராத கஷ்டமாக வரும். இதையெல்லாம் செட்டில்மென்ட் காலத்தில்தான் திருத்தியமைப்பதற்கான நிலைமை ஏற்படும். அப்பொழுது அவர்கள் பரிசிலனை செய்வார்கள்.

சிமெண்ட் பற்றாக்குறை

* 486 கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தற்போதைய நெருக்கடியான நேரத்தில் சிமெண்ட் பற்றாக்குறையை தவிர்ப்பதற்கு அரசாங்கமே சிமெண்ட் தொழிற்சாலை ஏற்படுத்தும் நோக்கம் உண்டா?

(இ) இல்லையேல் தனியார் துறையில் புதிய தொழிற்சாலைகள் ஆரம்பிக்க லைசென்சு வழங்கப்பட்டதா அல்லது வழங்க உத்தேசம் உண்டா?

(உ) எத்தனை தொழிற்சாலைகளுக்கு லைசென்ஸ் வழங்கப்பட்டன? எங்கே?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) The question of Government starting a cement factory to cater to their own requirements will depend on the availability of sufficient raw materials and other facilities.

(இ) & (உ) A licence has been granted to set up a new cement factory at Sankaridrug in the Salem district. It is hoped that licences will be issued shortly for setting up two more cement factories one at Karur in Tiruchirappalli district and the other at Rameswaram in Ramanathapuram district.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, லால்குடி வட்டத்தில், திரணி, ஒகளூர், பாளையம், கருடமங்கலம் ஆகிய பகுதிகளில் செமண்டுக்குத் தேவையான சுண்ணாம்புக் கல், ஜிப்சம் அதிகமாகக் கிடைக்கின்றன. அங்கு சிமெண்ட் தொழிற்சாலை வைக்க தனியார்த் துறைக்கு அனுமதி கொடுக்க முயற்சிகள் நடைபெற்று வருவதாகத் தெரிகிறது. அதைக் கூட்டுறவு முறையில் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சிமெண்டுத் தொழிற்சாலை வைப்பதற்கு ஜிப்சம் மிக முக்கியமான பொருள் அல்ல. அது மிகவும் குறைவு. சுண்ணாம்புக் கல் போதிய அளவு இல்லை என்று தான் ஜியலாஜிகல் சர்வே ரிபோர்ட்டிலிருந்து தெரிகிறது.

1st April 1963]

திரு. அ. பெ. தர்மலிங்கம் : அமைச்சர் அவர்கள் 'போதிய சுண்ணும்புக் கல் இல்லை' என்று சொல்கிறார்கள். டால்மியா சிமெண்ட் பாக்டரியினர் நான்காவது ஆலையொன்றைத் துவங்க அங்கே முயற்சி எடுத்துக்கொண்டு, மத்திய சர்க்காரிடம் அனுமதி கோரியிருப்பது இந்த சர்க்காருக்குத் தெரியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 'மைனிங் லீஸ்' சம்பந்தமாக ராஜ்ய சர்க்காரிடம்தான் அனுமதி கோரவேண்டும். இப்பொழுது சிமெண்ட் தொழிற்சாலை வைத்திருப்பவர்களுக்கு ஏராளமான சுண்ணும்புக் கற்கள் எடுப்பதற்கு 'மைனிங் லீஸ்' கொடுக்கப்பட்டிருக்கிறது. அதோடு கொஞ்சம் சேர்த்தால் நான்கு பிளாண்ட்கள் வைக்கலாம் என்கிற நிலைமை இருக்கலாம். ஆனால், தனியாகப் புதுத் தொழிற்சாலை வைக்கவேண்டுமென்றால், அதற்காக ஏராளமான சுண்ணும்புக் கல் (லைம் ஸ்டோன்) வேண்டும். அந்த அளவுக்கு இல்லை என்றுதான் இப்பொழு திருக்கும் அறிக்கை கூறுகிறது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : திருநெல்வேலி ஜில்லா, நாங்குனேரி, திருச்செந்தூர் பகுதிகளில் ஏறக்குறைய 90 லட்சம் டன் சிமெண்ட் தயாரிப்பதற்கு லாயக்கான சுண்ணும்புக் கற்கள் இருப்பதால் அங்கு ஒரு சிமெண்ட் தொழிற்சாலை வைக்கவேண்டும் என்று கோரி எப்போதாவது விண்ணப்பம் வந்திருக்கிறதா? அதன் பேரில் அரசாங்கம் என்ன முடிவு எடுத்திருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : திருநெல்வேலி ஜில்லாவில் இரண்டு பகுதிகளில் நமக்கு லைம் ஸ்டோன் கிடைக்கும் என்று அறிக்கைகள் இருக்கின்றன. ஒன்று நாசரத் பகுதி. அந்த நாசரத் பகுதியில்தான் சற்றேக்குறைய 9 மிலியன் டன் சுண்ணும்புக் கற்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால், அந்தச் சுண்ணும்புக் கற்கள் நல்ல நஞ்சை நிலத்திற்கு அடியில் இருக்கின்றன. நஞ்சை நிலத்தை விலை கொடுத்து வாங்கி சிமெண்ட் பாக்டரி வைக்க முடியாது. இரண்டாவது ரிபோர்ட்டில் வள்ளியூர்ப் பகுதிபற்றிக் குறிப்பிட்டிருக்கிறது. அங்கே போதுமான அளவு லைம் ஸ்டோன் இருக்கலாம் என்று எதிர்பார்க்கிறார்கள். அதற்காக இரண்டு அப்ளிகேஷன்கள்கூட வந்திருக்கின்றன.

திரு. எம். எஸ். செல்வராஜன் : அமைச்சர் அவர்கள் சொல்வது போல, புதிதாக நஞ்சையாகத் திருத்தப்பட்ட சில நூற்றுக்கணக்கான ஏக்கர் அவர்கள் குறிப்பிடுகிற நாசரத் பகுதியில் உண்டு. அந்த நிலங்களின் சொந்தக்காரர்கள், தங்களுடைய நிலங்களுக்கு ஒரு முறையான காம்பென்சேஷன் கொடுத்தால் பெரும் பகுதி நிலங்களை சிமெண்ட் தொழிற்சாலைக்கு உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்று விருப்பம் தெரிவித்தால் அரசாங்கம் இது போன்ற கோரிக்கைகளைக் கவனிக்குமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நஞ்சை நிலத்திற்குக் காம்பன்சேஷன் கொடுத்து சிமெண்ட் தொழிற்சாலை வைக்க முடியாது. அப்பொழுது சிமெண்ட் தங்கம் விற்கும் விலைக்கு வந்துவிடும்.

[1st April 1963

திரு. எஸ். மணி : பெரம்லூர் தாலுக்காவில் ஜிப்சம் கிடைப்பது உண்மையா ? அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : திருச்சி ஜில்லாவில் நிறைய ஜிப்சம் இருக்கிறது. அதை வைத்துத்தான் டால்மியா தொழிற்சாலை வேலை செய்கிறது. அதை வைத்துத்தான் கரூர் தொழிற்சாலை கூட வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. எஸ். நஞ்சுண்ட ராவ் : இப்பொழுது நம்முடைய ராஜ்யம் முழுவதிலுள்ள சிமெண்ட் தொழிற்சாலைகளினுடைய 'கபாஸிடி' 500,000 டன் என்று இருக்கிறது. இவ்வளவு பெரிய கபாஸிடியுள்ள சிமெண்ட் பாக்டரிகளில் சிமெண்ட் உற்பத்தி செய்யும்போதே சிமெண்ட் ப்ளாக் மார்க்கெட்டில் 15 ரூபாய், 16 ரூபாய் என்று விற்கிறது. 'அன்-இகனுமிக்'-காக இருந்தாலும் பரவாயில்லை என்று கருதி, சுண்ணாம்புக் கற்கள் கொஞ்சமாகக் கிடைக்கும் இடங்களில் கூட, 50 டன், 100 டன் சிமெண்ட் உற்பத்தி செய்யும் அளவுக்கு காட்டேஜ் இன்டஸ்ட்ரீஸ் ஆக சிறிய சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிக்க சர்க்கார் முன்வருமா ? அன்-இகனுமிக்காக இருந்தாலும் ப்ளாக் மார்க்கெட் விலைக்காவது சிமெண்ட் கிடைக்கு மல்லவா ? ஆகவே, அந்த அளவுக்கு சிறிய தொழிற்சாலைகள் ஆரம்பிக்க சர்க்கார் அனுமதி கொடுக்க முன்வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் ஒரு பிரசங்கம் செய்தார். 'அன்-இகனுமிக் யூனிட் வைத்தால் கட்டு படியாகாது. கட்டுபடியாகாததைச் சர்க்கார் எடுத்து நடத்த வேண்டுமென்றால், இந்த சர்க்கார் அதற்குத் தயாராக இல்லை. சிறு சிமெண்ட் தொழிற்சாலை வைக்க முடியுமா என்பது நீண்டகால மாகப் பரிசீலனை செய்யப்பட்டு, கன ரகத் தொழில்கள் மூலமாகத் தான் செய்ய முடியும் என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அவ்வாறு (ஹெவி இன்டஸ்ட்ரீஸ்) கன ரகத் தொழிலாகச் செய்யக் கூடிய சிமெண்ட் உற்பத்தியை சிறு ரகத் தொழிலாகச் செய்ய இயலாது என்று நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். அப்படி யாராவது தனியார் முதல் போட்டு முன்வந்து, லாப நஷ்டத்தை ஏற்றுக்கொள்வதாகச் சொன்னால், இந்த சர்க்கார் அவர்களுக்கு உதவி செய்வதற்குத் தயங்காது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். மேலும், நம்முடைய ராஜ்யத்தில் 15 லட்சம் டன் சிமெண்ட் உற்பத்தி செய்யக்கூடிய அளவுக்கு கபாஸிடி இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

திரு. கி. இரா. சம்பந்தம் : தஞ்சை ஜில்லாவிலும் நிறைய ஜிப்சம் கிடைக்கிறபடியால், அங்கே ஏதாவது சிமெண்ட் தொழிற்சாலை ஏற்படுத்த மனுக்கள் வந்து, சர்க்காரின் பரிசீலனையில் இருக்கின்றனவா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஜிப்சத்தை வைத்து சிமெண்ட் பண்ண முடியாது. லைம் ஸ்டோனை வைத்துத்தான் சிமெண்ட் பண்ண முடியும்.